Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 220/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆதிகிருஷ்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | முத்தையா | தொழில் | : | ஓய்வு, டிரைவர், TNSTC |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 66 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடியில் குடியிருந்துகொண்டு வருகிறேன். TNSTC ல் டிரைவராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். கன்னிவாடி சோமலிங்கபுரத்தில் உள்ள எனது தென்னந்தோப்பில் கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டிலிருந்து தோப்புக்கு சென்று காலை 06.00 மணியைபோல நான் பார்த்தபோது, நாங்கள் வெட்டிப்போட்டிருந்த 100, 150 இளநீர்களை காணவில்லை. இது சம்மந்தமாக நான் பக்கத்து தோட்டத்து காரர்களை விசாரித்தபோது எதிரி தான் இளநீரை எடுத்துச் சென்றதாக கூறியதன் பேரில் எதிரியை பிடித்து விசாரித்தபோது எதிரி திருடி சென்ற விபரம் தெரியவந்தது. இது சம்மந்தமாக எதிரியுடன் சென்று நான் கன்னிவாடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். திருடுபோன இளநீர்களின் மதிப்பு ரூ.1000/- இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் நான் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். அந்த கையொப்பத்துடன் கூடிய புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி உங்கள் தோப்பிலிருந்து தென்னங்காய்களை எடுத்துச் சென்றார் என்பதை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை நீங்கள் எழுதவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக யாரும் நேரடியாக பார்த்ததாக உங்களிடம்

சொல்லவில்லை என்றால் சரிதான். திருடுபோன இளநீர்களின் சரியான மதிப்பை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்விகள்:**

நீங்கள் உங்களுடைய புகாரில் 25 இளநீர் மட்டும் காணாமல் போனதாக சொல்லிவிட்டு உங்களுடைய முதல் விசாரணையில் 150 இளநீர் காணாமல் போனதாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor